
# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Alain, UAE

# மன்னா..



கர்த்தாவே,
என் முழு இருதயத்தோடும்
உம்மைத் துதிப்பேன்;
உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்.




பொழிவு: 13
ஆகாரம்: 08

Aug '2021

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல்யென்

# C.S.I. TAMIL PARISH ALAIN, UAE

| REGULAR SERVICE | BIBLE STUDY | CHILDRENS BIBILE SCHOOL |
|---|---|---|
| FRIDAY'S<br>6:30 PM – 7:30 PM<br>CHURCH<br>MAIN HALL<br><br>EVANGELICAL CHURCH CENTRE,<br>KENAD HOSPITAL CAMPUS,<br>ALAIN, UAE | WEDNESDAY'S<br>7:30 PM – 8:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: REV. S. P. BASKAR<br>056 7668 343 | FRIDAY'S<br>4:00 PM – 5:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. AUGUSTA LAWRANCE<br>056 641 1676 |
| **MEN'S FELLOWSHIP** | **WOMEN'S FELLOWSHIP** | **YOUTH FELLOWSHIP** |
| 2'ND THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. ASHOK KUMAR<br>050 842 9659 | 3'RD THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. SHALY MELBIN<br>056 394 1817 | 4'TH THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. SANTHOSH KUMAR<br>056 875 2723 |

## OTHER MEETINGS – VIA ZOOM

MONTHLY FASTING PRAYER: 1ST FRIDAY 11:AM TO 1:00PM

MONTH END/NEW MONTH STARTING PRAYER: (LAST DAY OF MONTH) 11:30 PM TO 12:30 PM

FOR MINISTRY DETAILS & ENQUIRES – PLEASE CONTACT

REV. S.P. BASKAR, THE PRESBYTER
CSI TAMIL PARISH ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
**Email: csitcalain@gmail.com** | **Web: csitamilparishalain.org**

# சபை போதகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**....மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்...மத்தேயு: 25:40**

.... "Truly, I say to you, as you did it to one of the least of these my brothers', you did it to me".
Matthew 25:40

**ஆண்டவர் இயேசு அன்பு நிறைந்தவர்...**
**ஆண்டவர் இயேசு அனைவரையும் சமத்துவத்துடன் நேசிப்பவர்....**
**ஆண்டவர் இயேசு காணாமல் போனதைத் தேடவே இவ்வுலகத்திற்கு வந்தவர்...**

எனவே நாம் இந்த உலகத்தில் மற்றவர்களுக்கு அன்பு காட்டும் போது கிறிஸ்துவின் மீது அன்பு கொள்வது போன்றதாகும்... பிறருக்கு உதவி செய்வது கிறிஸ்துவுக்கே செய்வது போன்றதாகும்... பிறரை தம்மைப் போல் நேசிக்கும் போது கிறிஸ்துவையும் நாம் நேசிக்கின்றோம் என்பதாகும். இந்த சிந்தனையுடன் நாம் வாழ அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்....

இந்த மாதத்தில் நமது தாய் நாடாகிய இந்திய தேசத்தின் சுதந்திர தினமாக ஆகஸ்ட் 15-ஆம் நாள் அனுசரிக்க இருக்கின்றோம். அந்த நாளில் உண்மையான விடுதலையும், சமாதானமும், முழுமையான வாழ்வும், நீதியும், ஏழை எளியோரின் வாழ்வுக்கு வழிகாட்டும் தேசமாகவும் செயல்பட நம்மையும் நம்முடைய தேசத்தையும் அர்ப்பணித்து ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்....

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கின்றேன்... தொடர்ந்து இந்த கோவிட்-19 காலக்கட்டத்தில் இந்த தேசத்தில் நம்மை பாதுகாத்து

வழி நடத்தி வருகின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். தொடர்ந்து நமது திருச்சபையில் அனேக குடும்பத்தினர் இந்த காலகட்டத்தில் இந்த தொற்றுநோயின் மூலமாக பாதிக்கப்பட்டார்கள் அவர்களுக்காக நாம் இணைந்து ஜெபித்தோம் ஆண்டவர் அனைத்து குடும்பத்தினருக்கும் கொடுத்த நல்ல சுகத்திற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம், மேலும் ஆண்டவரின் அருட்பணியாளராகிய நாங்களும் குடும்பமாய் இந்த தொற்று நோயின் மூலமாக பாதிக்கப்பட்டோம் எங்களுக்காக திருச்சபையாக ஜெபித்தீர்கள், அனேக உதவிகளை செய்தீர்கள், விசாரித்தீர்கள், திருச்சபை குடும்பங்களாகிய உங்கள் அனைவருக்கும் எங்களுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து இந்த கோவிட் காலகட்டத்தில் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..

தொடர்ந்து நமது திருச்சபையில் **ZOOM** வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக... அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக இந்த விடுமுறை காலங்களில் நமது திருச்சபையின் வழியாக ஒழுங்கு செய்துள்ள **THE PROVERBS CHALLENGE'2021** என்ற நிகழ்விற்காகவும், நமது பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். அத்துடன் நம்முடைய திருச்சபையின் குடும்பத்தினர் இந்த விடுமுறையின் காலத்தில் தங்கள் சொந்த தேசத்திற்கு சென்றிருக்கிறார்கள் அவர்கள் மீண்டும் நல்ல முறையில் திரும்பி வருவதற்காக நல்ல பயணத்தை மேற்கொள்ள ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். மேலும் இந்த கொரோனா மூன்றாம் அலை மிகவும் பயத்தை ஏற்படுத்துகின்றது. இதிலிருந்து விடுவிக்கப்பட ஊக்கமாய் ஜெபிக்கும்மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்...

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்...

Rev. S. P. Baskar




# நீதி வழங்கும் ஆண்டவருக்கு நன்றி....

கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்; உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன். சங்கீதம் 9:1

I will give thanks to the Lord with my whole heart; I will recount all of your wonderful deeds. Psalm 9:1

**முன்னுரை:** இந்த 9-ஆம் சங்கீதம் கிரேக்க மொழிபெயர்ப்பிலும், எரோணிமுசின் இலத்தின் மொழிபெயர்ப்பிலும் இந்த 9-ஆம் சங்கீதமும் 10-ஆம் சங்கீதமும் இணைந்து 38 வசனங்களைக் கொண்ட ஒரே பாடலாக அமைகின்றது. எனினும் எபிரேய மூலத்தைப் பின்பற்றி இவை இரண்டையும் வேறு வேறு பாடல்களாகவே காண்போம். இந்த இரண்டு பாடல்களும் ஒரே நபரால் வெவ்வேறு தருணங்களில் எழுதப்பட்டவை ஆகும். இது அகரவரிசையில் எழுதப்பட்டவை என்பதையும் அறிந்துக்கொள்ளலாம்...

Psalm 9:

Psalm.9-10 together follow a basically acrostic pattern, with the first word of each line beginning with successive letters of the Hebrew alphabet. The acrostic is not perfect, however. Several letters of the alphabet are missing or are out of order. Both Psalms say that God cares about those who are "oppressed" (9:9;10:18) both mention "times of trouble" (9:9; 10:1) both call on God to "arise" (9:19; 10:12) and both are sure that God will "forget the afflicted" (9:12; 10:12) The key difference between the two Psalms is that Psalm 9 is full of praise and thanks while Psalm 10 is mostly a lament..

## சங்கீதம் 9:1-2
## ஆண்டவரின் செயல்களுக்கு நன்றி.....

வ-1: கர்த்தாவே... உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்…இதற்கு "நிப்லவோத்" என்ற எபிரேயச் சொல் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது. இந்த சொல் கடவுளின் படைப்பு, மீட்பின் செயல்களை குறிப்பதாகும் அத்துடன் இஸ்ரவேல் மக்களின் வாழ்வில் செய்த அனைத்து செயல்களை குறிப்பதாகும்....

வ-2: உன்னதமானவரே..... "எல்யோன்" என்ற எபிரேயச் சொல் கடவுளின் முதன்மையை சுட்டிக்காட்டுவது ஆகும். இப்படி சொல்லி ஆண்டவரின் செயல்களுக்கு நன்றி செலுத்தும் பாடலாகும்....

## சங்கீதம் 9:3-4
## தனி வாழ்வில் ஆசீர்வதிக்கும் ஆண்டவர் .........

வ:3- என் சத்துருக்கள்.... இது பகைவரையோ, அல்லது துன்பங்களை சுட்டிக்காட்டுவது ஆகும்....

வ:4- நீதியுள்ள நியாயாதிபதியாய்ச் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறீர்.... இது கடவுளின் தனிப்பெரும் குணமாகிய நீதியை சுட்டிக்காட்டுகிறது. எனவே தனி வாழ்வில் பாதுகாத்து நீதி வழங்கி ஆசீர்வதிக்கும் ஆண்டவர் என்பதை சுட்டிக்காட்டுகிறது....

## சங்கீதம்: 9:5-10
## பொதுவாழ்வில் ஆசீர்வதிக்கும் ஆண்டவர்....

வ:5-துன்மார்கரை அழித்து... இங்கு துன்மார்க்கர் என்பது ஆண்டவருக்கு எதிரானவர்கள் என்பதாகும்....

வ:8-... நீதியாய் நியாயத்தீர்த்து, சகல ஜனங்களுக்கும் செம்மையாய் நீதி செய்வார்... இது கடவுளின் நீதி என்பது மக்கள் அனைவருக்கும் அளிக்கப்படுகிறது. குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு செயல்படுகிறது என்பதாகும்....

வ:9- சிறுமைப் பட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர்.. இது இஸ்ரவேலின் ஆண்டவர் சிறுமைப் படுத்தப் பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு ஆண்டவர் அடைக்கலமானவர் என்பதாகும்...

வ:10- உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்... ஆண்டவரின் நாமம் என்பது "யாவே" இதற்கு உடன் இருக்கின்றவர் என்பதாகும்.. எனது ஆண்டவரை சார்ந்து வாழ்பவர்களின் பொதுவாழ்வில் அவர்களை ஆசீர்வதிக்கிறார்....

**சங்கீதம்: 9:11-20:**
**ஆண்டவரின் இரக்கத்திற்காக வேண்டுதல்...நன்றி செலுத்துதல்...**

வ:13-மரணவாசல் களிலிருந்து... இது துன்பம், துயரத்தில் இருப்போர், கொடியே நோய்வாய்ப்பட்டவர்கள் தாங்கள் தள்ளப்பட்ட நிலையில் இருக்கும்போது ஆண்டவரின் இரக்கத்திற்காக நோக்கி பார்த்தல்....

வ:15-தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழுந்தார்கள்...... இது கொடியவர்கள் பிறருக்கு வெட்டிய குழியில் தாங்களே விழுவதை குறிப்பதாகும்.....

வ:17- பாதாளம் அல்லது நரகம்...."ஹெயோல்" என்ற எபிரேயச் சொல் "இருட்டு" என்பதாகும் . துன்மார்க்கர் கள் இப்படிப்பட்ட பாதாளத்தில் அல்லது நரகத்தில் விழுவார்கள் என்பதாகும்....

வ:19-எழுந்தருளும் கர்த்தாவே..... இது ஆண்டவர் மீண்டும் எழுந்து அவரை சார்ந்து இருப்போருக்கு இரக்கம் வேண்டும் என்று மன்றாடுவதும், கடவுளின் இரக்கத்தை பெற்றோர் நன்றி செலுத்துவதும் ஆகும்....

**முடிவுரை:** இவ்வாறு கடவுளை சார்ந்து வாழுகின்றவர்களுக்கு கடவுள் நீதியும், அமைதியும், சமாதானமும், வழங்குகின்றார் அந்த வாழ்வைப் பெற நாம் நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

இறைப்பணியில் உங்கள் ஆயர்
*Rev.S.P.Baskar*

DOWNLOAD OUR MONTHLY MANNA BY VISITING OUR CHURCH WEBSITE.
WE REQUEST YOU TO READ AND PARTICIPATE.
http://www.csitamilparishalain.org
மேற்குறிப்பிட்டுள்ள திருச்சபையின் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து; படித்து, பயன்பெற பங்குபெற அன்புடன் அழைக்கிறோம்

# பத்சேபாள்



**ஈசாய் தாவீது ராஜாவைப் பெற்றார்,**
**தாவீது ராஜா உரியாவின் மனைவியாயிருந்தவளிடத்தில்**
**சாலமோனைப் பெற்றான்; மத்தேயு: 1:6**

**..and Jesse the father of David the king.**
**And David was the father of Solomon by the wife of Uriah**
**Matthew 1:6**

**முன்னுரை:**

பத்சேபாள் கடவுளின் கருவி எனப்பெயர் பெற்றவர், கானானிய வழிமரபினர் கருணைக்குரியவர் ஆவார். இவர் தாவீதுக்கு ஐந்து குழந்தைகளைப் பெற்றுக் கொடுத்தவர். தமக்கு முதல் கணவர் உரியவை, தாவீது கொன்றுவிட அரசனுக்கு அன்புக்குரிய மனைவியாக எடுத்துக்கொள்ள படுகின்றார். சாலமோனின் தாயென்று புரிந்து கொள்ளப் பட்டாலும், உரியாவின் மனைவியாகவே அறிமுகப்படுத்தப் படுகிறார். (மத்தேயு: 1:6)

**பத்சேபாளின் அமைதியான பண்புகள்:**

தம்முடைய முதல் மகவை இறந்த பத்சேபாளின் அமைதியான பண்பு, மென்மையான மாண்பு, அரசிக்குரிய ஊக்கம் இவை அனைத்தும் கடவுளின் பார்வையில் பத்சேபாவுக்கு கருணை கிடைப்பதால் அமைந்தது. இதுவே இயேசு கிறிஸ்துவின் தலைமுறைப் பட்டியலில் இவர் பெயர் இடம்பெற்றது. இது இவரின் பண்பின் அடையாளமாகும்.....

**பத்சேபாள் கடவுளின் கருணைக்குறியவர்:**

கானானியர், அபேரியர், மோவாபியர் இதுபோன்ற யூதரல்லாத தாய் வழிமரபினர் இணைந்த ஒரு மீட்பின் வரலாற்றை மத்தேயு நற்செய்தி ஆசிரியர் கூறுகிறார். இது உலக மீட்பராகிய ஆண்டவர் அனைவருக்குரியவர் என்பதை காண்பிக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் காலத்திலும் அதற்கு முன்பும் பெண்களுக்கு மதிப்பு இருந்ததாகக் தெரியவில்லை, ஆனால் தாய்மை மதிக்கப்படுதல் வேண்டும் என்பதும் பல்வேறு பொறுப்புகளில் பெண்கள் இடம் பெற்றிருந்தார்கள் என்பதையும் பார்க்க முடியும். அந்த காலக்கட்டத்தில் வாய் பேச முடியாது பெண்களாக சிலர் நடத்தப்பட்டார்கள், அவ்வாறு வாய் பேச முடியாத பெண்ணாக நடத்தப்பட்டவர்தான் "பத்சேபாள்" எனவே இவர் கருணைக்குரியவராகவும் பார்க்கப்படுகிறார். இப்படிப்பட்டவர்களை கடவுள் தம் மீட்பின் வரலாற்றில் பயன்படுத்துகின்றார் என்பதை உணர முடிகிறது......

இன்றைக்கு நாமம் பத்சேபாள் போல எந்த சூழ்நிலையிலும் அமைதியும், நல்ல பண்புகள் உடையவராய் இருந்து ஆண்டவரின் கருணையைப் பெற்று அவரின் மீட்பின் பணியை செய்ய நம்மை இணைத்துக் கொள்ள அழைக்கப்படுகின்றோம்.......

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.....

இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா.....

***Mrs E Nancy Baskar***

# செயலரிடமிருந்து...




கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே..

பூமியிலுள்ள சகல ஜனங்களுக்கும் நான் உங்களை கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்ற மாறாத கர்த்தரின் நாமத்தில் மிகுந்த அன்புடன் வாழ்த்துகிறேன் ஊழிய பணியில் உங்களுடைய எல்லா பங்களிப்புக்கும் நன்றி கூறுகிறேன். 2021'ம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களை கடந்து இருக்கிறோம்; நம்மை காத்து நடத்தும் கர்த்தர் முன் வரும் நாட்களிலும் தமது கூடார மறைவில் ஒளித்துவைத்து பாதுகாப்பாக. தொற்று நாட்களில் வாழ்வாதாரம் இழந்து வருமானம் குறைந்து, அன்பானவர்களை இழந்து கண்ணீரின் பள்ளத்தாக்கை கடக்கிற யாவரையும் கர்த்தர் கரம் தூக்கி விடுவாராக.

இணையதளம் மூலமாக ஆண்கள் ஐக்கிய சங்கம், பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் கூடுகை, சிறுவர் வேதாகம பள்ளி கூட்டங்கள் மற்றும் ஆராதனைகளை நடத்துவதற்கு உதவி புரிந்த அருள்திரு.எஸ்.பி.பாஸ்கர் போதகர் ஐயா அவர்களுக்கும், அதன் பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சிறுவர் வேதாகம பிள்ளைகள் இணைந்து **KIDS HELP KIDS** என்ற சிறுவர் ஊழியத்தை இந்த புதிய கல்வி ஆண்டு முதல் தொடங்கிருக்கிறார்கள். பிள்ளைகளிடமிருந்து கிடைக்கப்பெறும் காணிக்கைகளை சேகரித்து அதனை ரித்திகா என்ற 5'வயது பெண் குழந்தையின் படிப்பு மற்றும் வாழ்வுக்காக வழங்கயிருக்கிறோம். இக்குழந்தையை குறித்த கூடுதல் விபரங்கள் மன்னாவில் நீங்கள் தெரிந்து கொள்ளலாம். பெற்றோர் இதை நினைவில் கொண்டு பிள்ளைகளை இவ்வூழியத்தில் உற்சாகப்படுத்தவும் குடும்ப ஜெபங்களில் இக்குழந்தையை நினைவில் கொள்ளவும் அன்பாய் கேட்டுக்கொள்கிறோம்.

நம்முடைய திருச்சபையின் ஒவ்வொரு ஆராதனைகளுக்காகவும் யாவரும் ஜெபிக்க வேண்டிக்கொள்கிறேன். உங்களுடைய ஜெபமும் ஈகையும் ஈடுபாடும் நிச்சயமாக கர்த்தரால் கனபப்படுத்தபடும். கர்த்தர் உங்களை மேன்மேலும் உயர்த்தி ஆசீர்வதிப்பார். உங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்..

இப்படிக்கு ...
கிறிஸ்துவின் பணியில்
எஸ். சுரேஷ் ராஜன்



# Rithika

Rithika is 5-years old and yet to start going to school. Rithika is 3rd among 3 daughters in the family. Her mother got married very young, when she was only 15 years old. Rithika along with her older sisters did not get love and care from her father because he wanted a son, not daughters. With the frustration of not getting a son, her father became alcoholic and abused her mother every day. Rithika and her sisters did not get daily food because their father did not want to Provide for the family. COVID'19 posed more threat on Rithika, her mother could not even get a small job to provide for the girls. It is during this time a month ago, Rithika's father got electrocuted (on job) and died on spot.

Rithika's young mother, is now unable to see a future for her and her daughters. She is devastated. The only option she sees before her is killing Rithika, her sisters and herself. IGP met Rithika's family and counselled the mother. IGP's social worker is in constant touch with the family and helping Rithika's mother to come out of suicidal thoughts.

Thankfully, Rithika will not be killed now, she is going to live with us! she will be given options. Going to school means that she will not be neglected or abandoned-instead, she will have the power to choose her own path. With your sponsorship, Rithika will live without fear for her safety and will be able to grow into a strong woman, secure in her value and worth.





# சாத்தானை (சர்ப்பம்) மிதிக்கும் அதிகாரம்..,

ஆண்டவரும் ரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.ஆண்டவர் தாமே உங்கள் அனைவரையும். இந்த மாதத்தின் எல்லா ஆசிர்வாதத்தோடும் சுகத்தோடும் ஆசீர்வதிப்பாராக.

கர்த்தர் உங்கள் ஒவ்வொருவருக்கும் சாத்தானை (சர்ப்பம்) மிதிக்கும் அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். சாத்தான் (சர்ப்பம்) என்பது ஏதோ திமிங்கலம், கரடி போன்ற ஒரு உயிரினத்தை குறிப்பிடவில்லை. வெளி 12:9ல் வாசிக்கிறோம் உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது என்று. வலுசர்ப்பம் என்பது சாத்தானை குறிக்கிறது. அந்த சாத்தானை மிதிக்கும் அதிகாரத்தை கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார்.

கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் இந்த கடைசி காலத்தில் வலுசர்ப்பதை எதிர்த்து ஜெயங்கொள்ளுகிற நாட்களில் இருக்கிறோம். உலகமெங்கும் தேவஜனத்திற்கு விரோதமாக, சபைக்கு விரோதமாக, குடும்பங்களுக்கு விரோதமாக, இப்படிப்பட்ட சர்ப்பத்தின் ஆவி விரோதமாய் செயல்பட்டு வருகிறது. சர்ப்பம் எப்படி ஏவாளை வஞ்சித்து ஆண்டவரை விட்டு தூரம்போகும்படி செய்ததோ, அதேமாதிரி இன்றும் அநேக குடும்பங்களை வஞ்சிக்கும்படியாக தீவிரமாக செயல்பட்டு வருகிறது. மாற்கு16:18ல் வாசிக்கிறோம்; விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள் அவர்களை சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக்குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். வஞ்சிக்கப்பட்டு போய்விடாதபடிக்கு விசுவாசத்தோடு சர்பத்தை மேற்கொள்ளுங்கள்.

நமக்கு ஒரு யுத்தம் உண்டு என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அது மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6:12). நம்முடைய குடும்பத்திற்கும், நமது தேசத்திற்கும் விரோதமாக செயல்பட நினைக்கிற பொல்லாத சர்ப்பத்தை (சந்துருவை) இயேசுவின் ரத்தத்தால் கழுவப்பட்டவர்களாகிய நாம் இயேசுவின் நாமத்தில் அவனை எதிர்கொள்ளுவோம். வசனம் சொல்லுகிறது பிசாசுக்கு எதிர்த்துநில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். நீங்கள் பிசாசை பார்த்து ஓடி ஒழிபவர்களாக அல்ல, அவனை எதிர்கொண்டு ஜெயிக்க பிறந்தவர்கள். சாத்தானை மிதித்து, ஜெயத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.

கர்த்தர் தாமே நம் அனைவரோடும் கூட இருந்து சாத்தானை மிதிக்கக்கூடிய அதிரத்தை தந்து வெற்றிசிறக்க பண்ணுவாராக இருப்பராக. ஆமென்

Article from Men's Fellowship / Mr. Ashok Kumar




Do you believe that God can do the impossible things in your life? If you trust in the Lord and believe him, the Lord God our saviour will miraculously accomplish all that you cannot.

"Faith is the assurance of things believed, the assurance of things not seen". (Hebrews 11:1)

Many times, you may wonder will lord answer our prayers. You may be wondering if the Lord is watching our suffering or not and wonder if there will be any change in my life from now on. All of these are possible if you trust in Jesus and that changes your life accordingly.

A god who does care even when it feels like he doesn't. Trusting in God means that whatever we suffer in the end it will turn into ultimate good.

In the Bible a man named Job suffered by the devil and lost all of his possessions and children and was affected with a disease from the scalp to soles. Even so, he did not abandon his faith in God.

Job 2:9,10- Job's wife told to reject your Lord and let him die. Even then he was zealous and faithful to the Lord, said that we who have benefited from the Lord should not receive evil without blaspheming the Lord. (Job: 2:11) Job's friends mocked and ridiculed him. Even so, Job trusted in the Lord. So, the Lord blessed Job with a doubled possession and blessing of all that he had lost.

In the same way, in spite of many trials and tribulations in our lives, even if our friends give up us and our situation is seeming against us, like Job, we will receive what we have lost and what we have prayed for, without giving upon the faith and trust in the Lord God above.  He will make our lives prosperous if we have faith and trust in the Lord.

"But he that trusted in the LORD shall prosper" (Proverbs 28:25).

Many times, very easily we become weary in our soul because of the problems of this world. And many goes to depression because we don't get what we need. But then here comes God's promise Philippians 4:19. God will meet all your needs accordingly to the riches of his glory in Jesus Christ. "He gives strength to the power of the week. I personally don't want to bore with my own experience because I do have hard times doubted moments. But at the end each and every one of us touched by our God in an unbelievable miraculous way that we surrender to God and from then onwards God will bless our life abundantly and will take care of our life. So dear friends,

we trust in our Lord Christ who have total control of everything, will one day wipe all evil from the face of the universe and restore humanity to harmony, peace and joy, even if for now we are suffering momentary afflictions.




**Eat whole fruit rather drinking smoothie.**

**Practice walking at least 15 mints a day and change your position every 1 hour.**



**Article Written by: Mrs. Anitha.K**

# THE GIFT OF RIGHTEOUSNESS



ROMANS 5:17 NIV 17 For if, by the trespass of the one man, death reigned through that one man, how much more will those who receive God's abundant provision of grace and of the gift of righteousness reign in life through the one man, Jesus Christ.

The New Testament reveals the good news that God offers righteousness as a free gift to everyone who receives the Lord Jesus Christ.

Righteousness means right-wise-ness or being right. So righteousness is right standing, or good standing with God.

Righteousness is a GIFT from God -- not something you can earn or achieve. God simply declares that you are innocent, as far as he is concerned, because you believe in Jesus.

You are righteous if Jesus is your Lord. In fact, Jesus is your righteousness. So, you are really as righteous as God is - because He IS your righteousness. As a believer in Jesus, you will never be more righteous - no matter what you do.

1 CORINTHIANS 1:30 NIV 30 It is because of him that you are in Christ Jesus, who has become for us wisdom from God - that is, our righteousness, holiness, and redemption.

SAY THIS: I receive the gift of right standing with God through my Lord Jesus Christ. Thank You Father God for this wonderful gift.



# உம்மண்டை, கர்த்தரே...

1. உம்மண்டை, கர்த்தரே,
நான் சேரட்டும்.
சிலுவை சுமந்து
நடப்பினும்,
என் ஆவல் என்றுமே
உம்மண்டை, கர்த்தரே, (2)
நான் சேர்வதே.

2. தாசன் யாக்கோபைப் போல்,
ராக்காலத்தில்
திக்கற்றுக் கல்லின் மேல்
தூங்குகையில்
எந்தன் கனாவிலே
உம்மண்டை, கர்த்தரே, (2)
இருப்பேனே,

3. நீர் என்னை நடத்தும்
பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணி போல்
விளங்குமாம்
தூதர் அழைப்பாரே
உம்மண்டை, கர்த்தரே, (2)
நான் சேரவே.

4. விழித்து உம்மையே
நான் துதிப்பேன்
என் துயர்க் கல்லை உம்
வீடாக்குவேன்
என் துன்பத்தாலுமே
உம்மண்டை, கர்த்தரே, (2)
நான் சேர்வேனே.

21.5.1889 அன்று இங்கிலாந்திலுள்ள ஜான்ஸ்டன் பட்டணம் மிகுந்த வெள்ளப் பெருக்கினால் சூழப்பட்டது. அங்கு ஒரு வண்டி சுழல் நீரில் சிக்கி, தண்ணீரில் மூழ்க ஆரம்பித்தது அவ்வண்டியில் கவிழ்ந்து கிடந்த ஒரு பெட்டிக்குள் ஒரு இளம் பெண் சிக்கிக் கொண்டிருந்தாள். அவள் தூர கிழக்கு நாடுகளுக்கு மிஷனரியாகச் செல்லத் தன்னை அர்ப்பணித்து, அப்பயணத்தை மேற்கொண்டவள். கரையிலிருந்து உதவி எதுவும் செய்ய முடியாமல் தவித்த மக்களை அமைதியாகப் பார்த்தாள். ஒரு ஜெபம்

பண்ணிவிட்டு, இப்பாடலை எந்தவித கலக்கமுமின்றிப் பாட ஆரம்பித்தாள். கரையிலிருந்து அனைவரும் கண்ணீர் மல்க, அவளோடு பாடலில் இணைந்தனர். பாடிக் கொண்டிருக்கும் போதே அவள் ஆண்டவரின் சந்நிதியைச் சென்றடைந்தாள்.

1912'ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதிநான்காம் நாள்! இங்கிலாந்து தேசமெங்கும் ஒரே கோலாகலம்! ஊரெங்கும், புதிதாக பயணத்தைத் துவக்கப் போகும் அந்த அதிநவீன சொகுசுக் கப்பலைப் பற்றிய பேச்சுத்தான்!

டைட்டானிக் என்ற அந்த உலகிலேயே மிகப் பெரியதும், பிரமாண்டமுமான சொகுசுக்கப்பல், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகளைச் சுமந்து கொண்டு, இங்கிலாந்திலுள்ள சௌதாம்ப்டன் துறை முகத்திலிருந்து, அமெரிக்கா செல்லத் தயாராகி, கெம்பீரமாக நின்றது. அக்கப்பலை வடிவமைத்த பொறியியல் வல்லுனர்கள், "இக்கப்பல் கடலில் மூழ்குவது சாத்தியமேயில்லை." என்று பெருமையுடன் கூறினர்.

ஆனால் நடந்தது என்ன? தன் முதற் பயணத்திலேயே அட்லாண்டிக் சமுத்திரத்தின் பனிக்கட்டிகளில் அக்கப்பல் மோதி, மூழ்க ஆரம்பித்தது.

உயிர்காக்கும் சாதனங்கள் போதுமான அளவு இல்லை. எனவே, திகிலோடு மரணத்தை எதிர் நோக்கிய 2000'க்கும் மேற்பட்ட பயணிகளின் மன அமைதியைக் காக்க, கப்பலின் இசைக்குழு இப்பாடலை இசைக்க ஆரம்பித்தது. அனைவரும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து, உணர்ச்சி பொங்க, இப்பாடலைப் பாடினார்கள். மூன்று மணி நேரத்திற்குள் அதில் 1500 பேர், உறைய வைக்கும் குளிர்ந்த சமுத்திர நீரில் மூழ்கி மரித்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் மெக்கின்லே இதைத் தனக்கு மிகவும் விருப்பமான பாடலென்று கூறிவந்தார். 1901'ம் ஆண்டு அவர் சுட்டுக் கொல்லப்பட்டபோது, உயிர் பிரியுமுன் அவர் முணுமுணுத்த வார்த்தைகள் இப்பாடலே. பின்னர் அவரது அடக்க ஆராதனையிலும், ஞாபகார்த்த ஆராதனையிலும், அமெரிக்கா முழுவதும் இப்பாடல் பாடப்பட்டது. இவ்வாறு, மிகவும் துயரமான தருணங்களில், பலதரப்பட்ட மக்களும் ஆறுதல் பெறப் பாடிய, புகழ் பெற்ற இப்பாடலை எழுதியவர், சாரா பிளவர் ஆடம்ஸ் என்ற ஒரு பெண்.

சாரா இங்கிலாந்திலுள்ள ஹார்லோவில் 22.2.1805 - அன்று பிறந்தாள். அவளது தந்தை பெஞ்சமின் "கேம்பிரிட்ஜ் இன்டெலிஜென்சர்", என்ற வாராந்திர புரட்சிப் பத்திரிக்கையின் நிருபர். எனவே, தந்தையின் எழுத்துத் திறமையை மகளும் பெற்றிருந்தாள்.

சாரா இளம் வயதிலேயே, அவள் பங்கு பெறும் திருச்சபையின் செய்தி மலரில், கட்டுரைகளும் கவிதைகளும் எழுதுவாள். பல தாலந்துகள் படைத்த சாரா ஒரு நல்ல அழகி. நடிப்பதிலும் திறமை மிக்கவள். 1834-ம் ஆண்டு ஜான் பிரிட்ஜஸ் ஆடம்ஸ் என்ற பிரபல பொறியியல் வல்லுனரைத் திருமணம் செய்து கொண்டாள். அவளுடைய

பல்வேறு தாலந்துகளையும், விருப்பங்களையும் அறிந்த அவளது கணவர், அவளை மிகவும் உற்சாகப்படுத்தினார். 1837-ல் லண்டனில் உள்ள ரிச்சர்டு கலையரங்கத்தில் மாக்பெத் சீமாட்டியாக நடித்தாள். ஆயினும், அவளது உடல்நிலை பெலவீனமாயிருந்ததால், அவளால் அதில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லை. எனவே, நடிப்பதை விட்டுவிட்டு, எழுத்துப்பணியில் தனது கவனத்தைத் திருப்பினாள். சிறந்த எழுத்தாளராக மாறினாள்.

சாராவின் சகோதரி எலிசபெத் இசை அமைப்பதில் தாலந்து படைத்தவளாக விளங்கினாள். எனவே, திறமைவாய்ந்த இச்சகோதரிகளிடம், அவர்கள் ஆலயப் போதகர் மறைதிரு வில்லியம் ஜான்சன் பாக்ஸ் தன் திருச்சபைக்கு ஒரு புதிய பாடல் புத்தகம் தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். சகோதரிகள் பழைய பாடல்களுடன், 13 புதிய பாடல்களையும், 62 புதிய ராகங்களையும் இப்புதிய பாடல் புத்தகத்தில் தங்களது காணிக்கையாகச் சேர்த்தனர்.

ஒருநாள் போதகர் பாக்ஸ் யாக்கோபின் பெத்தேல் அனுபவத்தைப் பற்றி ஒரு செய்தியைத் தயாரித்தார். அச்செய்தியின் நிறைவாக ஒரு பாடல் இருந்தால் நலமாக இருக்குமென இச்சகோதரிகளிடம் கூறினார். சாரா பாடலை எழுத, எலிசபெத் அதற்கு ராகம் அமைத்தாள். இவ்வாறு, மற்றுமொரு புதிய பாடல், அவர்கள் தொகுத்த பாடல் புத்தகத்தில் இடம் பெற்றது. இப்புத்தகம் 1841'ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

அமெரிக்காவில் 1844'ம் ஆண்டு இப்பாடல் அறிமுகமானது. ஆயினும் பிரபலமாக வில்லை. 12 ஆண்டுகளுக்குப்பின் "அமெரிக்க ஆலய இசைத் தந்தை", என்று அழைக்கப்படும் லோவல் மேசன், "பெத்தனி" என்ற அருமையான ராகத்தை இப்பாடலுக்கு அமைத்தார். இந்த ராகம் இப்பாடலை உலகப்புகழ் பெற்றதாக மாற்றிவிட்டது. இந்த லோவல் மேசன் என்பவர், "என் அருள் நாதா", போன்ற பல பிரபல பாடல்களுக்கும் ராகம் அமைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வுலக வாழ்க்கையில் வீசும் புயலில் நங்கூரமாக, வெற்றி அளிப்பவராக, ஆண்டவர் விளங்குகிறார் என்பதை, இப்பாடல் தெளிவாகக் காட்டுகிறது. எலிசபெத் 1846-ம் ஆண்டு எலும்புருக்கி நோயால் மரித்தாள். அவளது வியாதிப் படுக்கையில் உதவி செய்த சாராவும், இரண்டாண்டுகளுக்குள், தனது 43-வது வயதிலேயே மரித்தாள்.





# நாட்டப்பட்ட செடியாயிருங்கள்

சங்கீதகாரனாகிய தாவீது **“நானோ தேவனுடைய ஆலயத்தில் நாட்டப்பட்ட பச்சையான ஒலிவ மரத்தைபெலிருக்கிறேன்.”** என்று சங்கீதம் 52:8’ல் கூறுகிறார்.

பொதுவாக அரசு விழாக்கள் மற்றும் பெரிய கருத்தரங்கம் அல்லது அரசியல் மேடைகளில், குறிப்பாக சொல்லப்போனால் தற்காலிக அமைப்பு மேடைகளை அலங்கரிக்க அழகான தொட்டி செடிகளை வைத்து அலங்கரிப்பது பொதுவான வளக்கமாகி வருகிறது. கூட்டம் துவங்கும் முன் அவ்வகை செடிகள் மேடைக்கு முன்னதாக வந்துவிடும். குறிப்பாக அந்த நிகள்வுகள் முடிந்தவுடன் அதனை எடுத்து சென்று மற்றொரு நிகள்விற்க்கு அதனை பயன்படுகிறதை நாம் அன்றாடம் கண்கூடக காண்கிறோம். ஆண்டுகள் கடந்து சென்றாலும் இவ்வகையான அழகு செடிகள் ஒரு அங்குலம்கூட வளருவதில்லை குறிப்பாக அதனை பராமரிப்பவர்கள் வளர அனுமதிப்பதில்லை.


அப்படியே இக்காலத்து கிறிஸ்தவ விசுவாசிகள் தேவனுடைய சபைக்கு கன்வென்ஷன், விசேஷித்த கூட்டங்களுக்குத்தான் வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களை திருச்சபை பண்டிகை கிறிஸ்தவர்களாக காண்கிறது. இதுபோல ஞானஸ்னான கிறிஸ்தவர்கள், திருமுழுக்கு கிறிஸ்தவர்கள், திருமண கிறிஸ்தவர்கள் இப்படியாக அனேக நபர்கள் காணப்படுவதை காணமுடிகிறது, நாம் தொட்டிச்செடிகளாக இல்லாமல் நாட்டப்பட்ட செடிகளாயிருக்க வேண்டும், தென்னாப்பிரிக்காவை சார்ந்த ஒரு போதகர் JF. ROIANCE அவர்கள் தன்னுடைய பத்திரிக்கையில் தனது விசுவாசிகளைப்பற்றி கூறும்போது இவ்வாறு எழுதியுள்ளார். **Some believers are like pillar; some are like caterpillar.** ஆம் சில விசுவாசிகள் சபையில் அசையாத தூண்களாக இருக்கிறார்கள், ஆனால் சிலரோ அலைந்து திரியும் கம்பளிப் பூச்சிகளாயிருக்கிறார்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இன்று நாம் திருச்சபையில் எப்படி இருக்கிறோம். தற்காலிக அலங்கார செடிகளாயிருக்கிறோமா? ஆல்லது தரையில் நாட்டப்பட்டு நிலைத்து வளரும் செடிகளாக இருக்கிறோமா? நாட்டப்பட்டு ஓங்கி வளருகிற ஒலிவமரமாக இருப்போம், திருச்சபைக்கு தூண்களாக இருப்போம்.

# KORIJHOLLA CHURCH PROJECT

## கொரிஜ்ஹோலா ஆலையத் திட்டம்

## பணித்தள புதுப்பிப்புகள்


கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த திருச்சபையின் ஆண்கள்சங்க அங்கத்தினர்களே மற்றும் சபை உறுப்பினர்களே, கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஒரிசா மாநிலத்தின் கொரிஜ்ஹோலா பகுதிகளில் ஒரு தேவாலயம் கட்ட நாம் தீர்மானித்து இதற்காக அனைவரும் உற்சாகமாக காணிக்கை கொடுத்து வருகிறீர்கள். நாம் கொடுத்த முதல் தவணை தொகையினை கொண்டு நிலத்தை சீர்படுத்தும் பணிகள் மற்றும் மணல், கல் வாங்கும் பணிகளை தொடங்கி இருக்கிறார்கள். இதற்காக தொடர்ந்து நீங்கள் ஜெபிக்கவும் உதாரணமாக உங்கள் காணிக்கைகளால் தாங்கவும் உங்களை அன்பாய் கேட்டுக்கொள்கிறோம்

இப்படிக்கு கிறிஸ்துவின் பணியில்
திரு. நெல்சன் சோபித ராஜ்

# Sharing is Caring

Sharing's Caring

YOUTH FELLOWSHIP









18/06/2021 அன்று நமது சபை போதகர் தலைமைலயில் வாலிபர் ஐக்கிய சங்க அங்கதினார்களாக இணைந்து அல்-சுலிமாத், அல் நஹில் பகுதிக்கு சென்று; தமிழ் நண்பர்கள் சிலரை சந்தித்து சபை மக்களிடமிருந்து உதாரத்துவமாக பெறப்பட்ட பொருட்களை அவர்களிடம் கொடுக்க கர்த்தர் கிருபைக்கூர்ந்தார். இவர்கள் மாத ஊதியம் 600'க்கும் குறைவாக பெறுபவர்கள், கடந்த ஆறு மாதங்களில் அவர்களுக்கு சரியான சம்பளம் இல்லை... அவர்களுக்கு ஏதாவது தேவை அல்லது அவசர தேவைப்பட்டால் அவர்கள் 3 முதல் 5 கிமீ பாலைவனத்தில் நடக்க வேண்டிய சூழ்நிலை.

**இவர்களை ஜெபத்தாலும், உள்ளத்தாலும் தாங்குவோம்.**

# ரோமர்




## AUG'21 QUESTIONS

1. அவர்கள் தங்களை------------------- சொல்லியும் --------------------

2. யாருக்கு மகிமையும், சமாதானமும் உண்டாகும் ?

3. யாருடைய உதடுகளின் கிழ் பாம்பின் விஷம் உள்ளது ?

4. யார் பாக்கியவான்கள் ?

5. யாருக்காக மரிக்கத் துணிவான் ?

6. மரித்தவன் எதற்கு நீங்களாக்கப்படுகிறான் ?

7. உள்ளான மனுஷன் எதன் மேல் பிரியமாயிருக்கிறான் ?

8. தேவனுக்கு பிரியமாய் இல்லாதவர் யார் ?

9. யாரை சிநேகித்து, யாரை வெறுத்தேன் என்று எழுதியிருக்கிறது ?

10. விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி எதனால் வரும் ?

**ஜூலை'மாத விடைகள் / எழுதியவர்கள்**

1. அப்போ 21:9 | 2. அப்போ 22:27 | 3. அப்போ 23:2 | 4. அப்போ 23:11
5. அப்போ 24:24 | 6. அப்போ 25:13 | 7. அப்போ 27:5 | 8. அப்போ 27:37
9. அப்போ 28:8 | 10. அப்போ 28:12

---

திருமதி. ஹெலன் கம்பீரம், திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. ஜெயின் ராஜவேல், திருமதி. பிப்லின் நெல்சன், திருமதி. ஜமுனா ராணி, திருமதி. பமீலா டேனியல், திருமதி. அகஸ்டா லாரன்ஸ், செல்வி. அஜீன்ஷா, செல்வி. ஷெறின்ஷா, செல்வி. ஜோஷிகா வஷினி, செல்வி..ஜெரின் மேக்டலின், திருமதி. ஷெரின் டியென்ஷன், திருமதி. ரோஸ்லின் பாலாஜி, திருமதி. ஹெப்சிபாய் நேசமணி, திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி. ஜெயந்தா ஜாண், திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட், திருமதி. அனிதா.எஸ்.ராஜன்

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**

**Your Name / Bible Quiz / June'21** | **Sent to:** csitcalain@gmail.com

# August

## HAPPY BIRTHDAY

02 MRS. BLESSY GRACE JONISH

03 MR. D. RAJAVEL

12 MR. JEREMIAH KINGSTON

14 MSTR. JEREMIAH ALAN

15 MR. Y. MESSIAH DAS

16 MR. DERIN JOY

20 MSTR. ALDAN DERICK

24 BABY. CRASSLIN DEVONA

28 MRS. AUGUSTA LAWRENCE

28 MS. JOANNA STANLY

30 MRS. PADMA JOY

31 MRS. ANITHA RAJAN



## HAPPY Wedding ANNIVERSARY

**18**
MR. DERICK GASBATH JOY &
MRS. SHEEBA DERICK

**21**
MR. M.C.CHRISTOPHER &
MRS. BEETA CHRISTOPHER

**23**
MR. JASON SAMUEL &
MRS. PETRICIA SANTHI

**26**
MR. YOBU &
MRS. ANNA JOTHI


**29**
MR. PUSHPARAJ &
MRS. BIJI KUMARI

*"May he grant you your heart's desire and fulfil all your plans...!"*

# சிறுவர் பகுதி / Children's Corner


## Cartoon of the Month

**RESCUE 'COPTER** — A Joyful 'toon by Mike Waters




Righteousness and justice are the foundation of your throne; love and faithfulness go before you. – PSALM 89:14 NIV

**Parents... narrate the story to ur kid...**






EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
POST BOX. 67747 | ALAIN, UNITED ARAB EMIRATES
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY